# நீதிநெறி விளக்கம் –ஆசாரக்கோவை அறக்கருத்துக்கள் –ஒப்பீடு

# Moral Explanation – The Code of Conduct Ethics – Compare

***முனைவர் கோ. ஜாஸ்மின் சைனி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கருப்பண்ணன் மாரியப்பன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முத்தூர்

**Dr. K. Jasmine Saini**
*Assistant Professor, Tamil Department*
*Karuppanan Mariappan Arts and Science College*
*Muthoor*

## ஆய்வுச் சுருக்கம்

*மனிதவாழ்வு இன்பம்துன்பம்நிறைந்தது. இத்தகைய இன்ப துன்பங்கள் மனிதனின் செயல்பாடுகளினாலேயே நிகழ்கின்றன. ஒருவன் நல்ல செயல்கள் செய்தால் நல்வினை நடக்கும் என்றும், தீய செயல்கள் செய்தால் அவனுக்கு தீவினைநடக்குமென்றும்சமயங்கள்வலியுறுத்துகின்றன. சமயங்கள் நல்வினை, தீவினை என்பதை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல இலக்கியங்களைப் பயன்படுத்தின. அதனடிப்படையில் இலக்கியங்களில் அறக்கருத்துகள் பெருகின. குறிப்பாக நீதிநெறி விளக்கமும், ஆசாரக்கோவையும் அறக்கருத்துக்களை முன்வைக்கின்றன. ஒழுக்கமாக நடக்க வேண்டுமென்றும், கல்வி கற்பதன் முக்கியத்துவத்தையும் பெரியவர்களை மதிக்க வேண்டுமென்றும், ஆசைகளை அடக்கி வாழ வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றன.*

***முக்கியச்சொற்கள்:*** *நீதிநெறிவிளக்கம், ஆசாரக்கோவை, ஒழுக்கம், சிற்றின்பம், தீயசெயல்கள்.*

## Abstract

*Human life is full of joy and sorrow, such pleasures and pains are caused by human activities. Religions emphasize that if a person does good deeds. Good deeds will happen and if he does bad deeds. Bad deeds will happen to him. Religions used literature to convey good and bad deeds among the people. Based on that moral concepts have proliferated in the literature. Especially, moral interpretation and ethics present moral concepts. Emphasize moral conduct the importance of education, respect for the elders, and restraint of desires.*

***Keywords:*** *Moral Interpretation, Etiquette, Morality, Eroticism, Evil Deeds.*

**Citation**

Jasmine Saini, K. "Moral Explanation – The Code of Conduct Ethics – Compare." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 68–74.

**முன்னுரை**

*உலக வாழ்வில் மனிதனின் செயல் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டது. சமுதாயத்தில் வாழும் மக்கள் வெவ்வேறு மனநிலை,செயல்பாடுடையவர்கள். இத்தகைய தன்மையுடைய மனிதர்கள் அனைவரும் தன்னல நோக்கத்துடன் வாழ்பவர்களாகவும், பொது நல நோக்கமுடையவர்களாகவும் காணப்படுவர். பொதுநல நோக்குடையவர் பிறருக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள். பிறருக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் இன்றி தன்னல நோக்கமுடையவர்களுக்கு நற்கருத்துக்களைப் போதிப்பது அவசியமாகிறது. அதனடிப்படையில் வாய்மொழியாகவும், இலக்கியங்கள் வாயிலாகவும் அறக்கருத்துகள் பெருகின. அவற்றில் நீதிநெறி விளக்கமும், ஆசாரக்கோவையும் குறிப்பிடத்தக்கன. இந்த இலக்கியங்கள் குறிப்பிடும் அறக்கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.*

**நீதிநெறி விளக்கம்**

*இந்நூலின் ஆசிரியர் குமரகுருபரர். நீதிநெறி விளக்கம் நூறு பாடல்களைக் கொண்டது. இவருடைய காலம் 17-ம் நூற்றாண்டு.*

**ஆசாரக்கோவை**

*பதினென்க்கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். ஆசாரக்கோவை நூறு பாடல்களைக் கொண்டது. இதன் நூறு பாடல்களுமே மனித வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று வலியுறுத்துகின்றன.*

*கல்வி என்பது பண்டைய காலத்திலும் இக்காலத்திலும் இன்றியமையாதது. நாளுக்கு நாள் கல்வி வளர்ச்சியடைந்து கொண்டே வருகின்றது. மனித வாழ்வில் கல்வி என்பது கலங்கரை விளக்கமாக உள்ளது. கல்வியை நீதிநெறி விளக்கம் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.*

***கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்***
***மற்றோ ரணிகலம் வேண்டாவாம் -முற்ற***
***முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே***
***அழுகுக் கழகுசெய் வார்' (நீதிநெறி:12)***

*தங்கம், வைரம், இரத்தினங்களால் செய்யப்பட்ட அணிகலன்களுக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் வேண்டாம். அழகாக இருக்கும் ஒன்றிற்கு இன்னும் அதிகமாக யாரும் அழகு செய்ய மாட்டார்கள். அதைப்போல கல்வி கற்றவர்களுக்கு அந்த கல்வியால் கிடைக்கும் அழகே சிறந்த அழகாகும். அதல்லாமல் அவருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் எதுவும் தேவையில்லை என்று பதிவுசெய்துள்ளது. கல்வியறிவுடையர்கள் நிறைய கல்வி கற்று விட்டோம் என்ற செருக்கில்லாமல் வாழ வேண்டும். ஆணவம் ஒரு மனிதனை அழிக்கும் ஆயுதம். கல்வி கற்றவர்கள் தான் கற்ற கல்வியை 'தான்' என்ற ஆணவம் இல்லாமல் பிறருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று இப்பாடல் பதிவுசெய்துள்ளது.*

*கல்வியை அழகுடன் ஒப்பிட்ட நீதிநெறிவிளக்கம் கல்வியின் பெருமையைப் பற்றி குறிப்பிட்டுள்ளது. இதனடிப்படையில் ஆசாரக்கோவை கல்வி கற்றவர்களின் குண நலன்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளது.*

***பழியார் இழியார் பலருள் உறங்கார்***
***இசையாத நேர்ந்து கரவார் இசைவின்றி***
***இல்லாரை எள்ளி இகழ்ந்துரையார் தள்ளியும்***
***தாங்களும் கேள்வி யவர்[2].*** ***(ஆசாரம்:50)***

*கல்வி கற்றவர்கள் பலரின் முன்பு ஒருவரை பழித்தும் இகழ்ந்தும் பேச மாட்டார்கள். பல பேருக்கு முன்பாக நடுவில் படுத்து தூங்க மாட்டார்கள். தங்களால் செய்ய முடியாத காரியத்தை செய்வேன் என்று கூறி பின் அதைச் செய்யாமல் மறைந்து வாழ மாட்டார்கள். வசதி இல்லாத ஏழை மக்களை மறந்தும் கூட இகழ்ந்து பேச மாட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளது. நீதிநெறி விளக்கம் கல்வியின் சிறப்பை அழகுடன் ஒப்பிட்டுள்ளது. தன்னைத் தான் அழகு செய்யாதவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். ஆனால் அவ்வாறு அழகு செய்வது உண்மையான அழகு இல்லை. ஒருவன் கல்வியறிவு பெறுவதே அழகு என்பதை நீதிநெறி விளக்கம் குறிப்பிட்டுள்ளது. ஆசாரக்கோவை கற்றவர்களின் பண்புகளைக் குறிப்பிட்டுள்ளது. கல்வியின் பெருமையைப் பற்றி நீதிநெறி விளக்கமும், கல்வி கற்றவர்களின் பண்புகளைப் பற்றி ஆசாரக்கோவையும் குறிப்பிட்டுள்ளது. இவ்விரண்டு நூல்களும் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்றும் கல்வி கற்றவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறையைப் பற்றியும் பதிவு செய்துள்ளன.*

*ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டிய பண்புகளில் மிக முக்கியமானதாக கருதப்படுவது பெரியோர்களை மதித்தல். இப்பண்பை இவ்விலக்கியங்களும் வலியுறுத்துகின்றன.*

***பணியப் படுவார் புறங்கடைய ராகத்***
***தணிவில் களிப்பினால் தாழ்வார்க்கு- அணியது***
***இளையாள் முயக்கெனினுஞ் சேய்த்தன்றே மூத்தாள்***
***தொலையாத போகங் கொளல்[3].*** ***(நீதிநெறி :35)***

*நற்குணம் நிறைந்த முதியோர்கள் நம் வீட்டு வாசலில் நின்றால், நம்மிடம் நிறைய பொருட்செல்வம் இருக்கிறது என்ற ஆணவத்தால் அவர்களை நாம் மதிக்காமல் விட்டுவிட்டால் திருமகளின் வரவால் அந்த பொருட்செல்வம் அவர்களை விட்டு நீங்கி மூதேவியின் வரவை அவர் எதிர்கொள்ள நேரிடும் என்று குறிப்பிட்டுள்ளது. சான்றோர்களை மதிக்கும் பண்பை ஆசாரக்கோவையும் கீழ்க்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.*

***கால்வாய்த் தொழுவு சமயம் எழுந்திருப்பு***
***ஆசாரம் என்பர் குரவர்க்கு இவை இவை***
***சாரத்தால் சொல்லிய மூன்று[4].*** ***(ஆசாரம் :62)***

*பெரியோர்களின் காலில் விழுந்து வணங்குதல் வேண்டும்.அவர்களைத் தொழுது, வணக்கம் செய்ய வேண்டுமென்றும், அவர்கள் எழுந்தவுடன் நாம் உட்கார்ந்திருக்காமல் உடன் எழுந்து நிற்க வேண்டும் என்றும் இப்பாடல் பதிவு செய்துள்ளது.*

*ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கக் கூடிய ஒழுக்கத்தில் சிறந்தது பெரியோரை மதித்தல். இக்கருத்தை நீதிநெறிவிளக்கம் பொருட்செல்வத்தை விட பெரியோரை மதிக்க வேண்டுமென்றும்,*

*ஆசாரக்கோவை பெரியோரை வணங்கி அதற்கேற்ப மரியாதை செய்ய வேண்டுமென்றும் இதுவே பெரியோருக்கு செய்யும் சிறப்பான மரியாதை என்றும் பதிவுசெய்துள்ளது. பிறரை மதிக்க வேண்டுமென்ற அறக்கருத்து இவ்விரு இலக்கியங்களிலும் ஒத்திருப்பதை உணர முடிகிறது.*

*சமயங்கள் வலியுறுத்தும் முக்கியமான கொள்கைகளுள் ஒன்று சிற்றின்பம் துய்க்காமை. அவற்றில் முதன்மையானது பிறர் மனைவியை விரும்பக்கூடாது என்ற கருத்தை விளக்குகிறது. பிறர் மனைவியை விரும்புவதால் ஏற்படும் விளைவுகளைக் கூறுகிறது. இதை நீதிநெறி விளக்கம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.*

***பிறன்வரை நின்றாள் கடைத்தலைச் சேறல்***
***அறன் அன்றே ஆயினு மாக - சிறுவரையும்***
***நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே***
***மெய்ந்நடுங்க வுண்ணடுங்கு நோய்[5]. (நீதிநெறி:76)***

*கணநேரம் இன்பம் கிடைக்குமென்று கருதி பிறன் மனைவியை விரும்பி அவர் வாசலண்டைக்குச் செல்வது நல்ல செயலாகாது. மாறாக அதனால் வருவது துன்பம் மட்டுமேயன்றி இன்பம் ஒருக்காலும் வராது என்பதை இப்பாடல் புலப்படுத்துகிறது. இதே கருத்தை ஆசாரக்கோவையும் வலியுறுத்துகிறது.*

***பிறர்மனை, கள்களவு சூது கொலையோடு***
***அறனறிந்தார் இவ்வைந்தும் நோக்கார் திறனிலர் என்று***
***எள்ளப் படுவதூஉம் அன்றி நிரயத்துச்***
***செல்வழி உய்த்திடு தலால்[6]. (ஆசாரம்:37)***

*பிறன் மனைவிமேல் ஆசை வைத்தல், கள் குடித்தல், திருடுதல், சூதாடுதல், கொலை செய்தல் ஆகிய ஐந்து செயல்களையும் நல்ல நெறியில் நடக்கும் சான்றோர்கள் செய்யமாட்டார்கள். இச்செயல்களை அவர்கள் மேற்கொண்டால் அவர்கள் ஒழுக்கம் தவறியவர்கள் என்ற பழிச்சொல்லுக்கு ஆளாவார்கள். மேலும் இச்செயல்களால் அவர்கள் நரகத்திற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்று பதிவுசெய்துள்ளது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற மரபுக்கேற்ப மனிதர்கள் வாழ வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் இக்கருத்துகளும் பதிவுசெய்யப் பட்டுள்ளது. இக்கருத்தை எல்லாச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. நீதிநெறி விளக்கத்தில் பிறன்மனைவியை விரும்பினால் துன்பம் வந்து சேரும் என்றும், ஆசாராக்கோவையில் பிறன் மனைவியை விரும்பினால் ஒழுக்கம் கெட்டு நரகத்தில் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் பதிவு செய்துள்ளது. இவ்விரண்டு இலக்கியங்களும் பிறன் மனைவியை விரும்பாமை என்ற கருத்தை எடுத்துரைக்கின்றன. சிற்றின்பத்தில் அதிக நாட்டம் உடையவர்களின் செயல்களாக நீதிநெறி விளக்கம் பின்வருமாறு பதிவுசெய்துள்ளது.*

***கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமும் ஓம்பார்***
***களவொன்றோ ஏனையவுஞ் செய்வார் - பழியோடு***
***பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்***
***காமங் கதுவப்பட் டார்[7]. (நீதிநெறி -78)***

*காம உணர்வில் அதிகமுடையவர்கள் கொலை செய்ய தயங்கமாட்டார்கள். பொய் கூறுவார்கள். தன் மானம் அழிவதைப் பற்றியும் கவலைப்படமாட்டார்கள். களவு மேற்கொள்வதுடன், வேறு எந்த தீய செயல்களையும் துணிந்து மேற்கொள்ளுவார்கள். சிற்றின்பத்தால் பாவம் பழி வந்து சேரும் என்பதைப் பற்றி சிறிதளவும் கவலைப்படமாட்டார்கள். இதிலிருந்து சிற்றின்பம் என்பது தீயசெயல் என்பதை வலியுறுத்துகிறது. இதே கருத்தை ஆசாரக்கோவை குறிப்பிட்ட ஆசாரங்களுடன் பதிவுசெய்துள்ளது.*

***ஈன்றாள் மகள் தன்உடன் பிறந்தாள் ஆயினும்***
***சான்றோர் தமித்தா உறையற்க ஐம்புலனும்***
***தாங்கற்கு அரிதாக லான்[8]. (ஆசாரம்:65)***

*பெற்ற தாய், தன்மகள், தன் உடன்பிறந்தவள் என இவர்களுடன் அறிவில் சிறந்தவர்கள் தனியே தங்கியிருக்கக் கூடாது என்று கூறுகிறது. ஏனெனில் ஐம்புலன்கள் வழியே வரும் ஆசை தடுக்க முடியாதது என்றும் குறிப்பிட்டுள்ளது.*

*நீதிநெறி விளக்கமானது சிற்றின்பத்தால் விளைவது தீய செயல் மட்டுமே. இச்செயலின் மூலம் பழிபாவங்கள் மட்டுமே வந்து சேரும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளது. இதே கருத்தை ஆசாரக்கோவை உடன் 'தனித்திருக்கத் தகாதவர்கள்' என்ற தலைப்பில் சிற்றின்பமானது உடலில் தோன்றும் வேட்கை என்றும் இந்த செயல் தீமையானது என்றும் பதிவு செய்துள்ளது. இவ்விரு இலக்கியங்களிலும் சிற்றின்பம் கூடாது என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.*

*ஒருவர் ஒழுக்கத்துடனும், நல்ல செயல்கள் செய்வதன்மூலம் ஏற்படும் நன்மைகளைப் பற்றி நீதிநெறி விளக்கம் கீழ்க்கண்டவாறு பதிவுசெய்துள்ளது.*

***விலக்கிய ஓம்பி விதித்தனவே செய்யும்***
***நலத்தகையார் நல்வினையுந் தீதே - புலப்பகையை***
***வென்றனம் நல்லொழுக்கில் நின்றேம் பிறவென்று***
***தம்பாடு தம்மிற் கொளின்[9]. (நீதிநெறி -17)***

*நல்ல செயல்கள், தீய செயல்கள் இவை இரண்டும் புலன்கள் வழி நடைபெறக் கூடியது. இதன்படி நற்செயல்கள் செய்பவர் தற்புகழ்ச்சி அடைதல் கூடாது. தற்புகழ்ச்சி அடைவாரேயானால் அவர் செய்த நல்ல செயல்களும் தீமையானதாகவே மாறிவிடும் என்று குறிப்பிடுகிறது. ஒருவர் ஒழுக்கமாக வாழ வேண்டுமென்று சில கருத்துக்களை ஆசாரக்கோவை கீழ்க்கண்டவாறு பதிவுசெய்துள்ளது.*

***நன்றி அறிதல் பொறை உடைமை இன்சொல்லோடு***
***இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு***
***ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை***
***நல்லினத் தாரோடு நட்டல் இவைஎட்டும்***
***சொல்லிய ஆசார வித்து[10] (ஆசாரம் :1)***

*பிறர் செய்த உதவியை நினைத்து அவருக்கு நன்றி சொல்லுதலும், பொறுமை உடையவராக இருத்தலும், கடுஞ்சொற்களைக் கூறாமல் இனிய சொற்களைப் பேசுதலும், எந்த உயிருக்கும்தீமைதரும்செயல்களைச்செய்யாமலிருத்தலும், நல்லகல்வியறிவுடையவர்களாக இருத்தலும், நல்ல செயல்கள் செய்து உலகத்துடன் ஒட்டி வாழ்தலும், அறிவில் சிறந்த பெரியோர்களைத் துணையாக கொண்டிருத்தலும், நல்ல குணம் உடையவர்களுடன் நட்பை பெருக்கிக்கொள்ளுதலுமாகிய எட்டு பண்புகளையும் ஒழுக்கத்திற்கு உயிர்நாடியாக ஆசாரக்கோவை எடுத்துரைத்துள்ளது.*

*ஒழுக்கமுடன் வாழ்வதனால் ஏற்படும் விளைவை ஆசாரக்கோவை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.*

***பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு***
***நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை***
***இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்***
***ஒழுக்கம் பிழையாதவர்[11]. (ஆசாரம் :2)***

*ஒழுக்கத்துடன் வாழும் போது உயர்ந்த குடியில் பிறக்கும் பெருமை அடையப் பெறுதல், நீண்ட நாள் உயிர் வாழும் சிறப்புடையவராக இருத்தல், செல்வங்கள் உடையவராக வாழப் பெறுதல், அழகான தோற்றம் உடையவராகவும் இருத்தல், நிலங்கள் உடையவராகவும் இருத்தல், சிறந்த சொல்லாட்சி உடையவராகவும் இருத்தல், சிறந்த கல்வியறிவுடையவர்களாகவும் இருத்தல், நோயில்லாமல் வாழ்கின்ற வாழ்க்கை போன்ற உயரிய சிறப்புகளைப் பெற்று இருத்தல், இவ்வாறு வாழ்வதற்குரிய இலக்கணமாக, எல்லாராலும் போற்றப்படுபவர்களுமாக வாழ்வர் என்று கூறுகிறது. ஒழுக்கத்துடன் வாழ்வதே சிறந்த இன்பம் என்பதை வலியுறுத்துகிறது.*

*நீதிநெறி விளக்கம் நல்ல செயல்கள் செய்ய வேண்டும் என்றும், ஆனால் தற்புகழ்ச்சி சிறிதளவும் கூடாது என்று வலியுறுத்துகிறது. ஆசாரக்கோவை ஒழுக்கமாக வாழ வேண்டுமென்றும் குறிப்பிட்ட பண்புகளைச் சுட்டிக் காட்டியுள்ளது. ஒழுக்கத்துடன் வாழும் போது ஏற்படும் நன்மைகளை இவ்விரு இலக்கியங்களும் பதிவுசெய்துள்ளன. அறக்கருத்துகளில் முக்கியமான ஒன்று பிறரை ஏமாற்றுதல் கூடாது. அதை நீதிநெறி விளக்கம் பின்வருமாறு பதிவுசெய்துள்ளது.*

***இடைதெரிந்து அச்சுறுத்து வஞ்சித்து எளியார்***
***உடைமை கொண்டு ஏமாப்பார் செல்வம் - மடநல்லார்***
***பொம்மன் முலைபோல் பருத்திடினும் மற்றவர்***
***நுண்ணிடைபோல் தேய்ந்துவிடும்[12]. (நீதிநெறி-62)***

*பிறர் ஏமாறும் காலத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்தி வஞ்சகமாக ஏமாற்றி எளியவர்களின் பொருள்களை கவர்வது பேதைப் பெண்களைப் போல வளமுடையதாக இருந்தாலும், காலப்போக்கில் அவர்களின் மெல்லிய இடைபோல இல்லாமலாகிவிடும் என்று இப்பாடல் பதிவுசெய்துள்ளது. இதிலிருந்து எளியவர்களை ஏமாற்றி பெறும் செல்வம் நிலைக்காது என்ற அறக்கருத்தை அறிந்துகொள்ள முடிகிறது.*

**முடிவுரை**

*சமயங்கள் வலியுறுத்தும் அறக்கருத்துக்கள் ஏராளம். அவை இலக்கியங்களிலும் பிரதிபலித்துள்ளன. இதனடிப்படையில் நீதிநெறிவிளக்கமும், ஆசாரக்கோவையும் சிறந்த அறங்களாககல்வியறிவுடையவர்களாக இருத்தல் வேண்டுமென்றும், பெரியோர்களைமதித்து நடக்க வேண்டுமென்றும், பிறன் மனை நயவாமை பற்றியும், சிற்றின்பம் துய்க்கக்கூடாது என்பதையும், ஒழுக்கத்துடன்வாழ வேண்டுமென்று வலியுறுத்துகின்றன. மட்டுமல்லாமல் இவை கடைபிடிப்பதால் ஏற்படும் நன்மைகளையும், கடைபிடிக்காததினால் ஏற்படும் தீமைகளையும் எடுத்துரைத்துள்ளன. பண்டைய காலம் மட்டுமல்ல, தற்காலத்திலும் கூட நல்ல செயல்களைச் செய்பவர்களுக்கும், ஒழுக்கமுடன் வாழ்பவர்களுக்கும் சமூகத்தில் சிறந்த இடம் உண்டு. இவ்வறக்கருத்துக்களைப் பின்பற்றி வாழ்ந்து வரும் ஒவ்வொருவரும் நற்கதியை அடைய வேண்டுமென்று இவ்விரு இலக்கியங்களும் கருத்துக்களை பதிவு செய்துள்ளன.*

**அடிக்குறிப்புகள்**

1. *நீதிநெறிவிளக்கம் டாக்டர்.கதிர்முருகு பா.12, ப.13.*
2. *ஆசாரக்கோவை ஞா.மாணிக்கவாசகன். பா.50 ,ப.35.*
3. *நீதிநெறிவிளக்கம் டாக்டர்.கதிர்முருகு பா.35 ,ப.36.*
4. *ஆசாரக்கோவை ஞா.மாணிக்கவாசகன். பா.62 ,ப.42.*
5. *நீதிநெறிவிளக்கம் டாக்டர்.கதிர்முருகு பா.76, ப.75.*
6. *ஆசாரக்கோவை ஞா.மாணிக்கவாசகன். பா.37 ,ப.28.*
7. *நீதிநெறிவிளக்கம் டாக்டர்.கதிர்முருகு பா.78, ப.77*
8. *ஆசாரக்கோவை ஞா.மாணிக்கவாசகன். பா.65 ,ப.44.*
9. *நீதிநெறிவிளக்கம் டாக்டர்.கதிர்முருகு பா.17, ப.17.*
10. *ஆசாரக்கோவை ஞா.மாணிக்கவாசகன். பா.1 , ப.7.*
11. *மேலது பா .2 ,ப.7.*
12. *நீதிநெறிவிளக்கம் டாக்டர்.கதிர்முருகு பா.62, ப.62.*

## References

1. *Dr. Kathirmurugu, Neethi Neri Vilakam.*
2. *Manickavasagan, G., Asarakovai.*